நடத்தக்கூடிய ஒரு நிர்ப்பந்தம் இருக்கின்றது. பருத்தியினுடைய விலை 100 சதவிகிதம் உயர்ந்துவிட்டது. எனவே, இந்தத் தொழிலை நடத்துவது என்பது கடினமான ஒன்றாக இருக்கின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிப்போம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வேளாண்மையை நம்பியிருக்கின்ற விவசாயிகளை உள்ளடக்கியிருக்கின்ற பகுதியாகும். இப்பகுதி விவசாயிகளால் பருத்தி அதிகமாக விளைவிக்கப்பட்டு, மாடப்பள்ளி உழவர்கள் கூட்டுறவு சேவை சங்கத்தின்மூலம் செயல்படும் விற்பனை மையத்தில் மிகப் பெரிய அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. தொழிற்சாலைகளே இல்லாத எனது தொகுதியில் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிட, மாடப்பள்ளி உழவர்கள் கூட்டுறவு சேவை சங்கத்திற்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலத்தில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவே இந்த நூற்பாலையை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

பொது மருத்துவமனை

***8160—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்கு தொகுதியில் பொது மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்கு தொகுதியில் எம். வேலம்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையமும், மாநகராட்சி சார்பிலே இரண்டு மகப்பேறு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. அதில் எம். வேலம்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அனைத்து வசதிகளுடன்கூடிய ஒரு மிகப் பெரிய மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு திட்டமிட்டு நிதி ஒதுக்கியிருக்கிறது என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்றைய முன்தினம்தானே மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை முடிந்திருக்கிறது. இவ்வளவு பேர் கேள்வி கேட்க வாய்ப்புக் கேட்டால் எப்படி? மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுக்கு விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்த, மறைந்தும் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும், மக்கள் நலம் காக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்று விதி 110–ன்கீழ் திருப்பூர் மாவட்ட மருத்துவமனைக்கு 3 முத்தான திட்டங்களை வழங்கியதற்கு, திருப்பூர் மாவட்ட மக்களின் சார்பாகவும், எனது திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியானது திருப்பூரின் வடக்குப் பகுதியில் உள்ளது. திருப்பூர் மாநகரத்திலே, இரயில்வே பாலத்தின் வடக்குப் பகுதி முழுவதும் திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டது. அந்தப் பகுதி 29 வார்டுகளும், 10 ஊராட்சிகளையும் உள்ளடக்கியதாகும். அந்தத் தொகுதி மக்களின் நலன் காக்க ஒரு மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அந்த மருத்துவமனையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவதாக உறுதி கூறினார்கள். அந்த வகையிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி கிட்டத்தட்ட 3 இலட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்களைக்கொண்டது. 10 இலட்சத்திற்குமேல் பொது மக்கள் வசிக்கின்ற பகுதி. மேலும், அந்தப் பகுதிக்கு வெளியூர்களிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வந்து வேலை செய்கிறார்கள். அந்த வகையிலே, மீண்டும் எனது தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நேற்று திருப்பூருக்கு MRI Scan, விபத்துக்கால சிகிச்சை மையம் போன்ற பல்வேறு சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபொழுதே, JICA திட்டத்தின்கீழ், ஜப்பான் நாட்டோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, 1,634 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்த திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டது. அந்தத் திட்டத்திலே பிரதானமாக திருப்பூர் மருத்துவமனை எடுக்கப்பட்டு, திருப்பூருக்கு மட்டும் 11 கோடியே 75 இலட்சம் ரூபாயை ஒதுக்கினார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் திருப்பூர் மாவட்ட மருத்துவமனையை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையான மருத்துவமனையாக 5

2017 ஜூலை 6]

கோடி ரூபாய் செலவில் உயர்த்தியிருக்கிறார்கள். அதைத்தொடர்ந்து இப்பொழுது 11 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் குறிப்பிட்டவாறு அந்த மாவட்டத்தின் மக்கள் நலன் காப்பதற்காகவும், அங்கே மிக அதிகமாக வாழ்கின்ற பல்வேறு தொழிலாளர்களுடைய மருத்துவ சேவையை மனதிலே கொண்டும்தான் எம். வேலம்பாளையம் மருத்துவமனைக்கு மட்டும், civil work, கட்டடப் பணிகளுக்காக மட்டும் 20 கோடியே ஒரு இலட்சம் ரூபாயும், அதிநவீன உபகரணங்களுக்காக 12 கோடியே 85 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம், 44 கோடியே 61 இலட்சம் ரூபாய் திருப்பூருக்கு மட்டும் இந்த ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசின் சார்பில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மிகச் சிறப்பான முறையிலே சென்னைக்கு இணையாக உங்களுடைய திருப்பூர் மாவட்ட மக்களுக்கு மருத்துவ வசதி கிடைக்கும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணக்கம்பாளையம் ஊராட்சிப் பகுதி, நெசவாளர்கள் மற்றும் கூலித்தொழிலாளர்கள் அதிகம் நிறைந்த பகுதி. மேலும் அது பொது மக்கள் அதிகமாக வசிக்கின்ற காளிபாளையம் ஊராட்சி மற்றும் கொங்குபாளையம் ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதி. ஆதலால், அந்தப் பகுதியிலே ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூருக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அள்ளி, அள்ளிக்*

கொடுத்திருக்கின்றது. இது tertiary care. அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்திருக்கின்றார்கள். அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு, உரிய ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இயக்கச் செயல் தலைவர் அவர்களை வணங்கி, நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியத்தில் வட்ட மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதில் 9 அரசு மருத்துவர்கள் இருந்தார்கள். இப்போது 3 மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர். அதிலும் ஒருவர் பேறுகால விடுப்பில் சென்றுள்ளார். இரண்டு மருத்துவர்கள்தான் தற்போது உள்ளனர். துப்புரவுப் பணியாளர்கள் 8 நபர்கள் இருந்தார்கள். தற்போது இரண்டு நபர்கள் மட்டுமே உள்ளனர். மலைகள் நிறைந்த இப்பகுதியில் பாம்புக் கடி, நாய்க் கடி போன்றவற்றிற்கான மருந்துகள் போதிய அளவில் இருப்பில் இல்லை. ஒரே ஒரு பேரூராட்சியைக் கொண்ட எங்கள் பகுதிக்கு அதை இந்த அரசு செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்வதற்கு முன்பு, அதுகுறித்து ஆய்வு செய்ய வேண்டும். பொத்தாம்பொதுவாக பாம்புக் கடிக்கு மருந்தில்லை, நாய்க் கடிக்கு மருந்தில்லை என்று சொல்லக்கூடாது. அன்றைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எத்தனை குப்பிகள், எத்தனை மாதங்களுக்கு இருப்பில் இருக்கின்றன என்று ஏற்கெனவே கேட்டபோது, என்னுடைய துறைக்கான மானியக் கோரிக்கையின்போது இதே அவையில் நான் விளக்கமாகச் சொன்னேன். நத்தம் மருத்துவமனைக்கு நானே இரண்டு முறை

2017 ஜூலை 6]

ஆய்வுக்கு வந்திருக்கின்றேன். அங்கே சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பொதுவாக, கலந்தாய்வு நேரத்தில், மருத்துவர்கள் P.G. படிப்பிற்காகச் செல்கின்றபோது, ஏற்படும் தற்காலிகமான காலிப் பணியிடங்களுக்கு உடனடியாக மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மருத்துவர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. அந்த மருத்துவமனையில் காலிப் பணியிடங்கள் இருந்தால், உடனடியாக நிரப்பப்படும், மருந்து தட்டுப்பாடு என்ற நிலையே இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

148—

ஒருங்கிணைந்த அலுவலக வளாகம்

***18937—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில், பல்துறை அலுவலகங்களும் இயங்கும் வகையில் ஒருங்கிணைந்த அரசு அலுவலக வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதுமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.